**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 356/2022**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. திலீப் சிங்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கிருஷ்ணசிங்** | **Calling** | : | |
| **Village** | : | **கிலாம்பாக்கம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **சென்னை** | **Age** | : | **62** |
| | | | **Dated** | : | **13.02.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

**பட்டியல் சாட்சி 12 திரு. திலீப் சிங் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 9 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 12.11.2013 ம் தேதி செம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் காலை 09.00 மணி அளவில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் புறக்காவல் நிலைத்தில் இருந்து வந்த தகவலை பெற்று மருத்துவமனைக்கு காலை 10.00 மணிக்கு சென்று சிகிச்சையில் இருந்த முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவரிடம் படித்துக் காட்டினேன். அவர் படித்து பார்த்த பிறகு வாக்குமூலத்தை அவரிடம் கொடுத்து கையெழுத்து போடுமாறு கேட்டேன். அப்போது அங்கு முருகனுக்கு வேண்டப்பட்ட அவரது சமுதாயத்தை சேர்ந்த ஆதி தமிழர் பேரவையைச் சார்ந்த பெரியார்தாசன் என்பவர் அங்கு இருந்து கொண்டு முருகனிடம் நான்

கையெழுத்து போட கொடுத்த வாக்குமூலத்தை வாங்கி பார்த்துவிட்டு இப்படி இருந்தால் சரிப்படாது, நாங்கள் வேறமாதிரி வாக்குமூலம் நிலையத்தில் ஆஜராகி கொடுக்கிறோம் என கூறியதால் வாக்குமூலம் எதுவும் பெறாமல் நிலையம் வந்து பொதுநாள் குறிப்பில் அதை குறிப்பிட்டேன். மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்தேன். DSP என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கிற்கு தொடர்புடைய எதிர் வழக்கு ஒன்றை நான்தான் பதிவு செய்து இருக்கிறேன் என்றால், நினைவில் இல்லை. இதில் தொடப்புடைய எதிர் வழக்கு ஒன்றை நான் தான் பதிவு செய்தேன் என்றும், அந்த குற்ற வழக்கு எண். 287/2013 என்றால் சரிதான்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.14 10:39:52 +0530